(*a*) the steps taken by the Government to import more wheat from other States ; and

(*b*) the price of wheat imported ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) உபரி மாநிலங்களிலிருந்து கோதுமை இறக்குமதி செய்ய அரசு தடையில்லா சான்றிதழ்கள் வழங்கி வருகிறது.

(இ) அது அம்மாநிலங்களில் அவர்கள் கொடுக்கும் விலையைப் பொறுத்தது.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது கோதுமை வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய பல பேருக்கு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் மூலமாக விநியோகிக்கப்படும் கோதுமையை விட அவர்கள் கோதுமை குறைவாக விற்கப்படுகிறது என்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதன் விலை அதிகமாக இருப்பது தான் பிரச்சினையே தவிர, விலை குறைவாக இருக்கிறது என்ற பிரச்சினை இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தக் கோதுமை மாவட்டங்களுக்கு எப்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது ? விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் அந்த மாவட்டத்திற்குத் தேவையான "ஃபுட் பட்ஜட்டை" கேட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மத்திய அரசாங்கம் கொடுக்கிற கோதுமை பிரித்துக் கொடுக்கப் படுகிறது.

திரு. ஆலடி அருணா : வெளி மாநிலங்களில் இருந்து கோதுமை இறக்குமதி செய்வதில், பஞ்சாபில் இருந்து கோதுமை இறக்குமதி செய்ய தமிழக அரசுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது. இப்போது வெளி மாநிலங்களில் இருந்து கோதுமை இறக்குமதி செய்ய அனுமதி இருக்கிறது என்று கூறுகிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கிற 60,000 டன் கோதுமை போதாது என்ற வகையில் தனியாரும், அரசும் தேவை யான அளவு கோதுமையை வெளி மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசுக்கு மத்திய அரசு கோதுமையை ஒதுக்குகிறது. இதைத் தவிர சில மாநிலங்களில் உபரியாகக் கோதுமை இருக்கிறது. அந்தக் கோதுமையைப் பொறுத்த அளவில் நாம் தனியாருக்கு இறக்குமதி செய்ய அனுமதி தருகிறோம். அவர்கள்

அந்தந்த மாநில அரசுகளின் அனுமதியையும் பெற்று கோதுமையைக் கொண்டு வருகிறார்கள். கோதுமையைப் பொறுத்த அளவில் அந்தந்த மாநில அரசுகளே அனுமதி அளிக்கலாம். அரிசியைப் பொறுத்த அளவில் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தனியாருக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டதன் மூலம் எவ்வளவு கோதுமை இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெர்மிட் ஏராளமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இப்போது வந்துள்ள தகவல்படி சுமார் 5 பேர்கள் 17,250 டன் கோதுமையும், பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி சொந்த உபயோகத்திற்காக 1250 டன்னும் வாங்கியிருப்பதாகத் தெரிகிறது.

திரு. சோ. அழகர்சாமி : கோதுமையை இறக்குமதி செய்யும்போது தனியாருக்கு என். ஓ. சி. கொடுத்து இறக்குமதி செய்வதற்குப் பதிலாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அரசாங்கமே நேரடியாகக் கோதுமையை இறக்குமதி செய்ய முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்மைப் பொறுத்த அளவில் நம்முடைய தேவைக்கு அதிக அளவில் மத்திய அரசு கோதுமையை ஒதுக்கி வருகிறது. எந்த அளவுக்கு மாவட்ட அளவில் நம்மால் இதை விநியோகிக்க முடியும் என்பது ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். பிற மாநிலங்களில் இருந்து அந்த மாநில அரசுகளின் அனுமதியுடன் யார் யார் எவ்வளவு கோதுமையைக் கொண்டு வந்தாலும் நம்முடைய மாநிலத்தில் பற்றாக்குறை நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தேவை என்ற அளவிலே தான் ஏராளமாக 'நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட்' கொடுக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : கோதுமை கிடைக்கிறது என்று சொன்னாலும் நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் டில்லி சென்றிருந்த நேரத்தில் " எங்களுக்குக் கோதுமை மட்டும் போதாது, அரிசியும் தேவை. வேண்டுமானால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதி கொடுங்கள் என்று கேட்டதின் பேரில் மத்திய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? இரண்டு, மூன்று தினங்களுக்கு முன் சென்னைக்கு வந்த நிதியமைச்சர் தமிழ்நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்து கொடுக்கப்படும் என்று சொன்னதைப் பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : உணவு அமைச்சருடைய கடிதத்தில் இருந்தும், பொதுவாக மத்திய அமைச்சரோடு பேசியதிலிருந்தும் அரிசி இறக்குமதியால் அதிகச் செலவாகும். ஆக கோதுமையைத்தான் பயன் படுத்தவேண்டுமென்ற கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இறுதியாக நம்முடைய மாநிலத்திற்கு வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய முடிவு எடுத்ததாகத் தெரியவில்லை.